செய்தி வெளியீடு எண். 479 நாள்.14.8.2009

## மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மலர் வெளியிடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் இரண்டாவது கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இன்று (14.8.2009) சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மலர் வெளியிடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., அறிவியல் மன்ற தலைவர் கவிஞர் கா.வேழவேந்தன், தமிழ்ப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர்.ராஜேந்திரன், தமிழ்நாடு நூலகக் குழுத் தலைவர் திரு.கயல் தினகரன், வக்ஃபு வாரியத் தலைவர் கவிக்கோ.அப்துல் ரஹ்மான், மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் (பொ) டாக்டர்.எழிலரசு, மற்றும் தமிழ் வளர்ச்சி, செய்தித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா மலர் சிறப்பாக வெளிவருவதற்கும், மலரில் வெளியிடப்பட உள்ள கட்டுரைகள், கவிதைகள், செய்திகள், புகைப்படங்கள், வாழ்த்துச்செய்திகள் தேர்ந்தெடுப்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.